**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு- 2021**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின்படி, ஆணைக்குழுவின் செயற்பாடுகள், தேறிய செயற்பாட்டுச் செலவினத்திற்காக செஸ் நிதியத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட தொகையினை கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ரூபா. 352.5 மில்லியன் பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்தன. முன்னைய ஆண்டின் நிதிப் பற்றாக்குறை ரூபா.385.2 மில்லியன் ஆகும். சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப் பற்றாக்குறை ரூபா. 32.7 மில்லியன் அல்லது 8.4 சதவீதம் குறைவதற்கான முக்கியக் காரணம், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நிதித்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மானியம் ரூபா. 93.1 மில்லியன் அதிகரித்தமை ஆகும்.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு**

சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின், முக்கிய வருமானம் மற்றும் செலவினப் பொருட்களின் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2021 | 2020 | வேறுபாடு சதவீதத்தில் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| **ஆணைக்குழுவின், வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 1,820,617 | 5,360,805 | (66.0) |
| அரசாங்க மாணியம் (FSMP) | 104,804,128 | 11,720,560 | 794.2 |
| **ஆணைக்குழுவின் செலவினம்** | | | |
| பதவியணியினர் சம்பளம் | 148,971,963 | 132,419,676 | 12.4 |
| விசேட கொடுப்பனவுகள் | 18,085,294 | 16,606,045 | 8.9 |
| பதவியணியினர் வாகன கொடுப்பனவு | 26,662,653 | 23,298,500 | 14.4 |
| பதவியணியினர் மருத்துவ செலவுகள் மற்றும் காப்புறுதிச் செலவினம் | 15,350,619 | 7,914,882 | 93.9 |
| பதவியணியினர் நலனோம்பல் | 7,335,081 | 4,052,758 | 80.9 |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பிரயாணங்கள் | 0 | 2,309,872 | (100) |
| வாடகை மற்றும் வாகன நிறுத்துமிட வாடகை | 101,143,670 | 96,216,435 | 5.1 |
| மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவினம் - மொத்தம் | 55,241,934 | 32,376,005 | 70.6 |
| • மூலதனச் சந்தையும் உற்பத்திப்பொருள் அபிவிருத்தியும் | 14,862,714 | 16,920,166 | (12.1) |
| • பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 24,840,257 | 1,354,648 | 1,733.7 |
| • கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,802,431 | 1,609,193 | 12.0 |
| • சர்வதேச அங்கத்துவக் கட்டணம் – IOSCO | 4,210,388 | 3,684,862 | 14.2 |
| • பிரச்சாரம் மற்றும் விளம்பரம் | 146,664 | 0 | 100 |
| • சந்தை ஆராய்ச்சிக் கிரயம் | 9,349,152 | 8,795,002 | 6.3 |

(அ) உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நிதித்துறை நவீனப்படுத்தல் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 10 மில்லியன் தொகையை ஆணைக்குழு பெற தக்கதாக உள்ளது. பெறுபேற்று அடிப்படை நிதியுதவின் ஒரு பகுதியாக USD 2 மில்லியன் மற்றும் முதலீட்டு அடிப்படையிலான நிதியுதவின் ஒரு பகுதியாக USD 8 மில்லியன். மீளாய்வாண்டின் இறுதியில், செயற்திட்டத்தின் பெறுபேற்று அடிப்படை நிதியுதவின் ஒரு பகுதியாக ரூபா. 197.68 மில்லியனை (2019 இல் ரூபா 81,124,254, 2020 இல் ரூபா 11,720,560 மற்றும் 2021 இல் ரூபா. 104,804,128) மொத்தமாக ஆணைக்குழு பெற்றது. கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, திட்டத்தின் நிதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் கார்ப்பரேட் ஈக்விட்டி பிரிவைத் தீர்ப்பதற்கு டிஸ்பர்ஸ்ட் லிங்க் இன்டிகேட்டர் 4.1 இன் கீழ் தேவைப்பாடு இருந்த போதிலும், விநியோக எதிர் கொடுப்பனவு (DvP) அடிப்படையில் கார்ப்பரேட் ஈக்விட்டி பிரிவைத் தீர்ப்பதற்குத் தேவையான மத்திய வைப்பக அமைப்பு மற்றும் பிற விதிகளில் திருத்தங்களை மேற்கொள்ள ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. எவ்வாறாயினும், DvP ஏற்பாட்டை உள்ளடக்கிய வெற்றிகரமான கொழும்பு பங்குச் சந்தை வணிகத் தொடர்ச்சி திட்டமிடல் சோதனையின் மற்ற இரண்டு விநியோக இணைப்புக் குறிகாட்டிகள் மற்றும் DvP நடப்பதை உறுதிசெய்ய DvP ஐ செயல்படுத்தி ஒரு வருடத்திற்குப் பிறகு ஆணைக்குழு

ஆன்சைட் அல்லது ஆ.ஃ.ப் சைட் ஆய்வு/ கனக்காய்வை மேற்கொள்ளும் நடவடிக்கை ஜூலை 2022 வரை முடிவடையவில்லை.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான மூலதனச் சந்தை மற்றும் விளைப்பொருள் அபிவிருத்திச் செலவினம் ரூபா. 14.86 மில்லியனாகவும், முந்தைய ஆண்டில் இது ரூபா. 16.92 மில்லியனாகவும் இருந்தது, இது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா. 1.94 மில்லியன் அல்லது 12.1 சதவீதம் குறைவைக் காட்டுகின்றது.

(இ) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் (SEC சட்டம்) இன் பிரிவு 14பீ(2)(அ) இன் படி, பிணையங்கள் சந்தையை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, அந்தச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட செஸ் வரியிலிருந்து செலுத்துவதற்கு இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ரூபா.55,241,934 அல்லது மொத்த செலவினத்தில் 11.1 வீதமானது மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் மூலதனச் சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளதுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 11.8 வீதம் மற்றும் 7.4 வீதமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முக்கிய செயல்பாட்டு விடயங்கள் தொடர்பான அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | 2018 இன் முதலாவது காலாண்டின் இறுதியில் மத்திய கருமபீட தரப்பு பொறிமுறை (CCP) விநியோக எதிர் கொடுப்பனவு (DvP) முறையினை தொடர்ந்து அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தது. இது 2019 முதல் காலாண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், DvP தீர்ப்பனவு மாதிரி 2020 டிசம்பர் 31 இலும் நடந்து கொண்டிருந்தது. | DvP அமைப்பின் அமுலாக்க முகவர் கொழும்பு பங்குச் சந்தை (CSE) என்றும், DvP நிபுணரின் உதவியுடன் கொள்கை உருவாக்கத்தை வழிநடத்தி, தேவையான அனுமதிகளை வழங்குவதன் மூலம் முடிவு செய்யப்பட்ட கொள்கை மற்றும் விதிகள் மற்றும் செயல்படுத்தல் செயல்முறையை விரைவுபடுத்துதல் ஆகிய செயல்முறைகளை எளிதாக்குவதே ஆணைக்குழுவின் பங்கு என்பதை ஆணைக்குழு தெரிவிக்க விரும்புகிறது.<br>DvP செயல்படுத்துவதற்கு முன், CSE ஆனது DvP க்கு ஏற்ப தேவையான மாற்றங்களைச் செய்யும் தரகர் பின் அலுவலக அமைப்புகள் திறன் கொண்டவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும், இதன் விளைவாக அனைத்து தரகர் பின் அலுவலகம் மற்றும் ஒழுங்கு முகாமை அமைப்புகளும் மேம்படுத்தப்பட வேண்டும். முழு செயலாக்க செயல்முறையையும் விரைவுபடுத்தி 2021 ஆகஸ்ட் 16 க்குள் முயற்சியை முடிப்பதில் SEC இன் ஈடுபாடு மகத்தான பங்களிப்பை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.<br>முடிவு செய்யப்பட்ட CCP மாதிரி மற்றும் கொள்கை CSE மற்றும் | இலக்கு காலத்திற்கு ஏற்ப செயல்முறையை முடிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆணைக்குழுவின் இயக்குநர்கள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது மற்றும் அதன் நிறைவு 2023 இன் முதல் அல்லது இரண்டாவது காலாண்டில் எதிர்பார்க்கப்படுகிறது. | |
| ஆ. 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க SEC சட்டத்தின் 14 பி 2(அ) பிரிவின் மூலம் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செஸ் தொகையிலிருந்து செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனச் சந்தை மற்றும் விலைப்பொருள் மேம்பாட்டிற்கு ரூபா.36.1 நிதி கூறப்பட்ட சட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூபா. 14.8 மில்லியன் அல்லது 41 சதவீதம் மட்டுமே மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கூறிய நோக்கத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. | மூலதனச் சந்தை மற்றும் விலைப்பொருள் மேம்பாட்டைப் பொறுத்தவரை, ரூபா. 36.1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இது சாலை நிகழ்ச்சிகளை நடத்துதல், பின் தரகர் மற்றும் கட்டளை முகாமை அமைப்பு மற்றும் யுனிட் டிரஸ்ட்களுக்கான விளம்பர பிரச்சாரம் ஆகிய மூன்று தலைப்புகளின் கீழ் இருந்தது. இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக ஆணைக்குழு கொண்டிருந்த திட்டங்களை கருத்தில் கொண்டு இந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டன. இருப்பினும், பூட்டுதல், கூட்டம் கூடுவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எதிர்பார்த்த செயல்பாடுகளை நடத்த முடியவில்லை. | முடிந்தால் மாற்று வழிகளில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

## 3.2 மனித வள (HR) முகாமைத்துவம்

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ. 2018 ஜனவரி 22 இல் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் கீழ் உள்ள துணை இயக்குநர் நாயகம், இயக்குனர் மூலதன சந்தை அபிவிருத்தி, புலனாய்வுகள் இயக்குனர், மேற்பார்வை இயக்குனர், இயக்குநர் கார்ப்பரேட் விவகாரங்கள், உதவி நீதி இயக்குனர் மற்றும் அமுலாக்கல் மற்றும் உதவி இயக்குநர் மூலதன சந்தை அபிவிருத்தி ஆகிய பதவிகள் 31 ஜுலை 2022 ஆம் திகதி வரை காலியாக இருப்பது அவதானிக்கப்பட்டது. மீதமுள்ள முக்கிய முகாமையாளர் பதவிகள் ஆணைக்குழுவின் திறம்பட செயல்பாட்டிற்கு பாதிப்பை ஏட்படுத்தியிருக்கலாம். | மேற்கூறிய அனைத்து பணியிடங்களையும் நிரப்புவதற்கு, ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்காணல் நடத்தியது. இவ்வாறு கூறப்பட்ட நிலையில், இந்தப் பதவிகளுக்கு பொருத்தமான நபர்களை ஆணைக்குழுவால் அடையாளம் காண முடியவில்லை. எப்பொழுதெல்லாம், பொருத்தமான விண்ணப்பதாரர் அடையாளம் காணப்பட்டாலும், அத்தகைய விண்ணப்பதாரர்கள் முக்கியமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட குறைந்த சம்பளம் காரணமாக பதவிகளை ஏற்க ஆர்வமாக இல்லை.<br>தற்போதைய நிலவரப்படி, ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது மற்றும் இந்த காலியிடங்களை நிரப்புவதற்கான நேர்காணல்களை நடத்தும் பணியில் உள்ளது. | இந்த காலியிடங்களை உரிய காலத்திற்குள் நிரப்ப வேண்டும்.. |

| | | |
|---|---|---|
| ஆ. ஆணைக்குழுவில் இணைக்கப்பட்ட அதிகாரி ஒருவர் 19 ஏப்ரல் 2016 முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். எனினும், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் இதர சலுகைகள் தவிர்ந்து அவரது மாதாந்த மொத்த சம்பளத்தில் பாதிக்கு சமனான தொகையானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபனச் சட்டத்தின் துணைப்பிரிவு 31.11 இற்கு முரணாக செலுத்தப்பட்டது. 2016 ஏப்ரல் 20 முதல் 2018 ஒகஸ்ட் 31 வரை அவர் சார்பாக ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட அரைமாத சம்பள செலவு ரூபா.5,212,815 ஆகும். 2018 செப்ரம்பர் 18 திகதி பொது நிர்வாகங்களுக்கான கோப் (COPE) குழுவின் பரிந்துரையின் படி ஆணைக்குழு சம்பளம் கொடுப்பதை நிறுத்திவிட்டு மொத்த ஊதியத்தை திரும்ப பெற ஏற்பாடு செய்ய வேண்டும். அதன்படி, 2018 செப்டெம்பர் முதல் அரைமாத சம்பளம் வழங்குவது நிறுத்தப்பட்டதுடன் மேலே குறிப்பிட்ட தொகையை 2018 நவம்பர் 15 திகதி கடிதம் மூலம் திருப்பி செலுத்துமாறு அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. இருப்பினும், 6 செப்டெம்பர் 2022 வரையிலும் ஆணைக்குழுவினால் அது அறவிடப்படவில்லை. | மேற்படி தொகையான ரூபா 5.2 மில்லியனை திருப்பித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு பல எழுத்துப்பூர்வ நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன என்பதை ஆணைக்குழு தெரிவிக்க விரும்புகிறது. இருப்பினும், அவரால் ஒப்புகைச் சீட்டு அனுப்பப்பட்டிருந்தாலும், அவர் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டார். அவருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை இன்னும் நடந்து வருகிறது, விசாரணையை விரைந்து முடிக்குமாறு விசாரணை அதிகாரி மற்றும் தரப்பினரிடம் ஆணைக்குழு பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்துள்ளது. | COPE இன் பரிந்துரையின் படி செலுத்தப்பட்ட மொத்த சம்பளத்தை மீட்டெடுப்பதற்கான செயல் முறையை விரைவுபடுத்துங்கள். |

## 3.3 கொழும்பு துறைமுக நகரத்தில் விளம்பர பிரச்சாரத்திற்காக பணம் செலுத்தப்பட்டது

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திருத்தப்பட்ட (பழைய சட்டம்) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 13(கே) இன் படி, பிணையங்கள் சந்தை தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. ஆணைக்குழு 2021 ஆம் ஆண்டில் போர்ட் சிட்டியினால் அவர்களுக்கு வரவுள்ள வாய்ப்புகள் குறித்து பொது | ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளைக் கையாளும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க SEC சட்டத்தின் (திருத்தப்பட்டபடி) பிரிவு 13(கே) இன் படி, பிணையங்கள் சந்தை மற்றும் வளர்ச்சி குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க மற்றும் பிணையங்கள் சந்தை தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துத ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.<br><br>2021.04.15 திகதியிட்ட கடிதத்தின் மூலம் பணம் மற்றும் மூலதனச் சந்தை மற்றும் | |

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக அரசாங்க விளம்பரப் பிரச்சாரத்தின் பங்களிப்பாக ரூபா.8,821,948 தொகையை அதன் வரம்பில் இல்லாத போதும், தேசிய நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச நிறுவனச் சீர்திருத்தங்கள் அமைச்சகத்தின் செயலாளருக்கு வழங்கியிருந்தது. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், 2021 ஏப்ரல் 15 அன்று சம்பந்தப்பட்ட அமைச்சினால் இந்தக் கொடுப்பனவு கோரப்பட்டது, ஆனால் அது நிறைவேற்றப்பட்ட பின்னர் பணம் செலுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அரச நிறுவனங்களின் மறுசீரமைப்புக்கான அமைச்சு, கொழும்பு துறைமுக நகரத்தின் பார்வையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு உத்தேச பிரச்சாரத்தை ஆணைக்குழுவிற்கு அறிவித்தது. இதன்படி, செலவினத்தைக் குறிப்பிட்டு மேற்படி பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்குமாறு முதலீட்டுச் சபை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஆணைக்குழுவிடம் அமைச்சு கோரிக்கை விடுத்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சட்டத்தின்படி, “கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள், எந்தவொரு பங்குகளையும் நிறுவுவதற்கும் செயற்படுத்துவதற்கும் வசதியாக, துறைமுக நகர ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை ஆணைக்குழு சுட்டிக்காட்ட விரும்புகிறது. விலைமதிப்பற்ற உலோகம் அல்லது பொருட்கள், பரிமாற்றம் அல்லது சந்தை, அங்கீகரிக்கப்பட்ட நபர்களால் இயக்கப்படும், எந்தவொரு நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வர்த்தகம் செய்ய, பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டு. இவ்வாறான நிலையில், கொழும்பு துறைமுக நகரத்தில் பங்குச் சந்தை நிறுவப்படும் பட்சத்தில், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுடன் இணைந்து அத்தகைய செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் ஆணைக்குழு அவசியமாகும் என்பது தெளிவாகிறது.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 9 பொருட்களில் பாதீடு மற்றும் உண்மையான செலவினங்களுக்கு இடையே 27 சதவீதம் முதல் 101 சதவீதம் வரையிலான | நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்ட சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, சில தலைப்புகளின் கீழ் பாதீட்டு தொகைகள் பயன்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், கோவிட்-19 தொற்றிலிருந்து ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக போக்குவரத்து வசதிகளை | பாதீட்டுக்கு இணங்க வேண்டும் |

| | |
|---|---|
| குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. | வழங்க ஆணைக்குழு முடிவு செய்ததால், பயணம் தொடர்பான எதிர்பார்க்கப்படும் செலவு பாதீட்டு ஒதுக்கீட்டை விட 101 சதவீதத்தை தாண்டியுள்ளது. இதனால் ஆணைக்குழுவின் வாகனங்களும் அதிகளவில் பயன்படுத்தப்படன. இதன் விளைவாக, இந்த வாகனங்கள் குறிப்பிடத்தக்க காலத்திற்கு பயன்படுத்தப்பட்ட காரணத்தால் பழுதுபார்க்க வேண்டியிருந்தது. எனவே, பரிசீலிக்கப்பட்ட ஆண்டில் முக்கிய பராமரிப்பு நடவடிக்கைகள் வாகன காப்பீடு மற்றும் பராமரிப்பு செலவுகளில் 27 அதிகரிப்புக்கு வழிவகுத்தன. |